සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

# ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
# SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

**இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை 2020(I)**

காலம் 03 மணித்தியாலங்கள்

## இலங்கையின் சட்ட முறைமைகள் (01-II)

විභාග අංකය
Index No / சுட்டெண் ......................................

- **முதலாவது வினா உட்பட ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.**

---

01. (i) இலங்கையில் முதன் முறையாக உயர் நீதிமன்றம் எந்த சட்ட ஏற்பாட்டினால் நிறுவப்பட்டது? (02 புள்ளிகள்)

(ii) ஒல்லாந்தர் காலத்தில் காணப்பட்ட உச்ச நீதிமன்றம் எது? (02 புள்ளிகள்)

(iii) இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் எந்தச் சட்டத்தின் அமுலாக்கத்தின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டது? (02 புள்ளிகள்)

(iv) சட்ட மூலாதாரமொன்றாக பட்டேவிய யாப்புப்புக்கள் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களினால் பயன்படுத்தப்பட்டது? (02 புள்ளிகள்)

(v) நீதிமன்றக் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் அத்தியாயத்தில் குறிப்பிடப்படும் நீதிமன்ற வகை யாது? (02 புள்ளிகள்)

(vi) ஆங்கிலச் சட்டம் இலங்கை சட்ட முறைமைக்குள் உள்வாங்கப்பட்ட இரண்டு (02) முறைகளும் யாவை? (02 புள்ளிகள்)

(vii) உயர் நீதிமன்றத்தினதும் மேல் நீதிமன்றத்தினதும் நீதிபதிகள் ஓய்வுபெறும் உச்ச வயதெல்லையை முறையே குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(viii) பின்வரும் ஒவ்வொரு வழக்கும் தொடுக்கப்பட வேண்டிய நீதிமன்றத்தைக் குறிப்பிடுக.

(அ) பொதுத் தேர்தலின் தேர்தல் மனுக்கள்
(ஆ) பராமரிப்புக்கான கோரிக்கைகள்
(இ) மரணசாதன வழக்குகள்
(ஈ) காதி சபையின் தீர்மானத்திற்கு எதிரான மேன்முறையீடுகள்
(உ) சோரத்திற்கான நட்டஈடு
(ஊ) கடற் கொள்ளை

(06 புள்ளிகள்)

02. (i) இலங்கையில் நடைமுறையிலுள்ள “ ஒரேயொரு கலங்கமற்ற தனியாள் சட்டம்” ஆக கருதப்படும் தனியாள் சட்டத்தைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(ii) அந்த தனியாள் சட்டத்தின் ஏற்புடமையை சுருக்கமாக விளக்குக. (16 புள்ளிகள்)

03. (i) இலங்கைக்குள் விவாகமொன்றை பதிவுசெய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள மூன்று (03) சட்டங்களும் யாவை? (06 புள்ளிகள்)

(ii) “நதாலி அபேசுந்தர எதிர் கிரிஸ்தோபர் அபேசுந்தர (1998) ISLLR 185 நடுத்தீர்ப்பு இலங்கையின் சட்ட வரலாற்றில் முக்கிய மைற்கல்லாகும்” கலந்துரையாடுக. (14 புள்ளிகள்)

04. (i) 1952 ஆம் ஆண்டில் 44 ஆம் இலக்க கண்டிய விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் அட்டவணையில் “கண்டிய மாகாணங்களின் (Kandyan Provinces)” கீழ் வரக்கூடிய மாவட்டங்கள் ஐந்தைக் (05) குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(ii) தோன டயனா 1999-12-31 ஆம் திகதி கந்தளாய் ஆதார வைத்தியசாலையில் பிறந்தாள். தற்போது அவள் எப்பாவல பிரதேசத்தில் வசித்து வருகின்றாள். தனக்கு கண்டியச் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையதா என்பது தொடர்பில் சட்ட ஆலோசனை நாடுகின்றாள். அவளுக்கு ஆலோசனை வழங்குக. (15 புள்ளிகள்)

05. (i) தேசவழமைச் சட்டத்தின் பிரதான மூலாதாரங்கள் நான்கை (04) குறிப்பிடுக. (08 புள்ளிகள்)

(ii) தேசவழமைச் சட்டத்தின் ஏற்புடமை தொடர்பில் சுருக்கமாக விளக்குக. (12 புள்ளிகள்)

06. (i) மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அமைப்பை குறிப்பிடுக. (05 புள்ளிகள்)

(ii) மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் பிரயோகிக்கப்படும் நியாயாதிக்கத்தை சுருக்கமாக விபரிக்க. (15 புள்ளிகள்)

07. பின்வரும் விடயங்கள் தொடர்பில் சிறு குறிப்பு எழுதுக.

(i) நீதிச் சேவை ஆணைக்குழு

(ii) ஆட்கொணர்வு பேராணை (Writ of Habeas Corpus)

(iii) காதி நீதிமன்றம்

(iv) கண்டியச் சட்டத்தின் விவாக முறைகள்

(20 புள்ளிகள்)

*************